[2003 மார்ச் 24

தரிசு நிலம் அங்கு இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு மறுபரிசிலனை செய்து தனியாக மகளிர் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளே இல்லாத பின்தங்கிய பகுதி, பெண்கள் கல்விக்கு முன்னுரிமை, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேவையின் அடிப்படையில் அந்தப் பல்கலைக்கழகங்களே புதியதாக கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. அல்லது அரசின் நிதியுதவியின்றி சுயநிதி அடிப்படையில் மகளிர் கல்லூரி தொடங்க அனுமதி கோரும் விண்ணப்பங்கள், தனியார் கல்வி முகமைகளிடமிருந்து பெறப்பட்டால், அரசினுடைய பொறுப்பு, அரசினுடைய கடமை, தடையின்மைச் சான்று வழங்குவது மட்டும்தான். எனவே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் பெறப்படுகின்றபோது, அவற்றின் தகுதி அடிப்படையில் தடையின்மைச் சான்று வழங்குவது குறித்து அரசு நிச்சயமாக பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

48—

விடுதிகள்

•7849—திரு. கி. பாரிமோகன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன? சொந்தக் கட்டடத்திற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி தொகுதியில் 6 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும், 5 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும் ஆக மொத்தம் 11 விடுதிகள் இயங்குகின்றன.

2003 மார்ச் 24]

(ஆ) தருமபுரி தொகுதியில் கீழ்க்கண்ட 7 விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன:

1. அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி.

2. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, தருமபுரி நகரம்.

3. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, கோணங்கி நாயக்கன்ஹள்ளி.

4. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, கிருஷ்ணபுரம்.

5. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, கடத்தூர்.

6. அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, தொப்பூர்.

7. அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி, தருமபுரி.

இவ்விடுதிகளுக்குச் சொந்த நிலங்கள் கிடைப்பதைப் பொறுத்தும், அரசின் நிதிநிலைமையைப் பொறுத்தும், சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

திரு. கி. பாரிமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் நிதியாண்டிலே ஆதிதிராவிடர் விடுதிக்கும், பிற்படுத்தப்பட்டோர் விடுதிக்கும் தலா 12 இலட்சம், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒதுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த வகையிலே, தருமபுரி தொகுதியிலே தலா 12 இலட்சம் இரண்டு விடுதிகளுக்கு ஒதுக்கப்பட்டது. அதிலே ஆதிதிராவிடர் நல விடுதி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, தருமபுரி நகரத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு 12 இலட்சம் ஒதுக்கப்பட்டு இன்று வரை இடத் தேர்வின் காரணமாகவோ அல்லது என்ன காரணமாகவோ இன்னும் அந்தப் பணி தொடங்கப்படாமல் உள்ளது. ஆகவே, அந்த மாணவர் விடுதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகை, அதைப்போல அரசின் மூலமாக வருகின்ற தொகையை வைத்து அந்த விடுதி கட்டப்படுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் ஒதுக்கியிருப்பதாக உறுப்பினர் அவர்கள்

சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அத்தனையையும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே இந்த ஆண்டில். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 49, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

49—

நிவாரணத் தொகை

***19713—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை மீண்டும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை வழங்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இவ்வினா எழ இடமில்லை.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு நிவாரணத்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS